2006 ஜனவரி 19]

46—

பயோ டீசல் உற்பத்தி

***65913—திரு. கே.வி. முரளிதரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதியில், 940 ஏக்கர் பரப்பளவில் உள்ள கோலட்டி பட்டுப் பண்ணை நிலத்தில் காட்டாமணக்கு பயிரிட்டு, என்.ஜி.ஓ. மகளிர் குழுக்கள் மூலமாக பயோ டீசல் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோலட்டி பட்டுப் பண்ணையில் பட்டு விதைக்கூடுகள் உற்பத்தி செய்வதைத் தவிர, காட்டாமணக்கு பயிரிட்டு, என்.ஜி.ஓ. மகளிர் குழுக்கள் மூலமாக பயோ டீசல் உற்பத்தி செய்வதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மூலக் கேள்வி கேட்டவர் இருக்கையில் இல்லை. வினா எண் 47, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

47—

பயிற்சி மையங்கள்

***41535—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் இந்திய அளவில் நடைபெறும் I.A.S./I.P.S. தேர்வுகளில் பங்கு பெறுவதற்கு இலவச பயிற்சி மையங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?